20.01.2025

அ.வ.எண். 1071/2017 மற்றும் 160/2021 மற்றும் 8/2021

பி.வாசா.1 - சக்திகுமார் (எ) விஜயராகவன்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய தகப்பனார் மற்றும் அவர் உடன் பிறந்தவர்களுக்கு விவசாயம் தான் தொழில் என்றால் ஆமாம். எனக்கும் விவசாயம் தான் தொழில் என்றால் இல்லை, நான் SPINNING MILL வைத்துள்ளேன். முதன்மை சார்பு நீதிமன்றம் கோயம்புத்தூரில் என்னுடைய அறிவுறுத்தலின் பேரில் அ.வ.எண்.379/2016 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதில் உள்ள வாதுரைக்கான சங்கதிகளை நான் தான் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் மேற்படி அ.வ.எண்.379/2016 வழக்கின் வழக்குரையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் என்றால் நான் தமிழில் சொல்லியிருந்தேன், என்னிடம் காட்டப்படுவது ஆங்கிலத்தில் உள்ளது. அதிலுள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். மேற்படி வாதுரை வா.சா.ஆ.33 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி வழக்கில் இறந்துபோன தனபால் ஒரே பிரதிவாதி என்றால் ஆமாம். மேற்படி வழக்கில் நான் வாதுரையுடன் அதில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களின் அசலை தாக்கல் செய்யவில்லை, நகலை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் என்னுடைய வழக்கறிஞர் மேற்படி ஆவணங்களை பின்னிட்டு தாக்கல் செய்வதாக எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம், ஆனால் நான் அசல் ஆவணங்களை தான் எனது வழக்கறிஞரிடம் கொடுத்தேன். வா.சா.ஆ.33 உள்ள சங்கதிகளை ஒப்புகொண்டு தான் நான் அந்த வழக்கை நடத்தி வந்தேன் என்றால் ஆமாம். மேற்படி வழக்குரையில் நான் என்னுடைய மூதாதையர்கள் பற்றிய கொடிவழி பட்டியல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். ஆவண எண்.3810/1914 தற்போது எங்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

நான் எந்த தேதியில் என் அண்ணணிடம் பாகம் கேட்டேன் என்று மேற்படி வா.சா.ஆ.33 ல் சொல்லப்படவில்லை என்றால் நினைவில்லை. நான் நீதிமன்றததில் மேற்படி வா.சாஆ.33 வழக்கில் சமரச மனு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம், மேற்படி சமரச மனுவில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் எழுதப்பட்டது. இந்த வழக்கு ஆரம்ப நிலையிலேயே கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்ததால் தான் நான் அந்த

வழக்கு பிரதிவாதியிடம் பாகம் கேட்டதாக குறிப்புகள் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 ஆவணம் மேற்படி வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள சமரச மனு மற்றும் அதற்கான தீர்ப்பு என்றால் ஆமாம். மேற்படி சமரச மனுவில் ஆவண எண்.3810/1914 ன் ஆவணத்தின் கீழ் எங்களுக்கு உரிமை வந்ததாக நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

மேற்படி சமரச மனுவில், நாங்கள் நேரடியாக ஆஜரானதற்கு குறிப்புகள் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சமரச மனுவில், கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் கடைபிடிக்கபடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் நான் தான் வாதி, தனபால் தான் பிரதிவாதி என்பதற்காக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சமரச மனுவில், என்னுடைய புகைப்படம் ஒட்டி அதில் கையெழுத்துக்கள் செய்யப்படவில்லை என்றால் ஆமாம். எனக்கு மேற்படி வா.சா.ஆ.33 ஆவணத்தில் உள்ள வழக்கை தாக்கல் செய்தது மதணசீலன் வழக்கறிஞர். நான் சொல்வது தவறு என்றும் மேற்படி வாதுரையை தாக்கல் செய்தது மதணசீலன் வழக்கறிஞர் இல்லை என்றால் ஆமாம். மேற்படி பி.வா.சா.ஆ.8 சமரச மனுவில் என்னுடைய வழக்கறிஞர் மற்றும் தனபால் வழக்கறிஞர் கையொப்பம் தவிர வேறு வழக்கறிஞர் முகவரி மற்றும் அவரது வழக்கறிஞர் பதிவு எண் இல்லை என்றால் ஆமாம்.

வா.சா.ஆ.33 ல் P.மாரப்ப கவுண்டர் அவருடைய மகன் தேவன்ன கவுண்டர் மற்றும் M.மாரப்ப கவுண்டர் என்ற பெயர்கள் தான் குறிப்பிட்டு உள்ளேன் என்றால் ஆமாம். இந்த வழக்கிற்கு பின்னிட்டு திருப்பூரில் அசல் வழக்கு எண்.108/2004 என்ற வழக்கில் ராமசாமி சொல்லி தான் P.மாரப்ப கவுண்டருக்கு வேறு பெண் மக்கள் இருந்தது தெரிய வந்தது. மேற்படி நான் சொல்லிய சங்கதிகளை என்னுடைய எதிர்வழக்குரை மற்றும் சாட்சிய வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஏற்கனவே வா.சா.ஆ.33 ல் உண்மையான வாரிசுகளை சொல்லிவிட்டு தற்போது இந்த வழக்கிற்காக பொய்யாக ராமசாமி சொன்னதாக நான் மேற்படி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி என்ன தேதியில் என்னிடம் ராமசாமி சொன்னார் என்று என்னுடைய எதிர் வழக்குரையிலும், சாட்சியத்திலும் நான் சொல்லவில்லை என்றால் ஆமாம், ராமசாமி ஏற்கனவே தாக்கல் செய்த 108/2004 வழக்கில் தான் மேற்படி சங்கதிகளை சொல்லி இருந்தார், அதை தற்போது நான் நகல் எடுத்து பார்த்த போது தான் எனக்கு

தெரிய வந்தது.  நான் அந்த வழக்கில் நகல் கேட்டு 2023 ல் தான் மனு கொடுத்தேன்.

அந்த வழக்கில் ராமசாமிக்கு ஆதரவாக ஒருதலைபட்ச தீர்ப்பாணை ஆகியுள்ளது. நான் சொல்லிய 108/2004 வழக்கு தாக்கல் செய்த நிலையிலேயே தள்ளுபடி ஆனது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின் தீர்ப்பு நகலை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.  மேற்படி 108/2004 வழக்கு தாக்கல் செய்த நிலையில் இருந்து எனக்கு தெரியும் என்றால் தெரியாது. என் தகப்பனார் சொல்லி தான் எனக்கு அந்த வழக்கு நடந்தது 2021 ல் தான் எனக்கு தெரியும்.  இந்த 1071/2017 வழக்கில் என் தகப்பனார் பிரதிவாதி இல்லை, என் தாயார் பிரதிவாதி. நானும், என் தகப்பனாரும், என் தாயாரும் ஒரே விலாசத்தில் தான் வசித்து வருகிறோம் என்றால் இல்லை.  என்னுடைய முதன்மை சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள முகவரியும், என் தாயாருக்கு 1071/2017 வழக்கில் குறிப்பிட்டுள்ள முகவரியும் ஒன்று தான் என்றால் இல்லை.

என் தாயார் 2012 ல் ஒரு நீதிமன்ற தீர்ப்பை பதிவு செய்தபோது அதில் நான் முதன்மை சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியை தான் சொல்லியுள்ளார் என்றால் அப்படி நீதிமன்ற தீர்ப்பை என் தாயார் வாங்கவில்லை. நானும், என் தாயாரும், என் தகப்பனாரும் ஒரே விலாசத்தில் குடியிருக்கவில்லை என்று எனது எதிர் வழக்குரையில் சொல்லவில்லை. நான் தனியாக பெற்றோர்களை விட்டு மில்லில் வசிக்கிறேன் என்று எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.  நானும், என் பெற்றோரும் நான் முதன்மை சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியில் ஒன்றாக தான் இருக்கிறோம் எங்களுக்குள் கருத்து வேறுபாடு என்றும், தனித்தனியாக வசிக்கிறோம் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.33 ல் நான் கோரும் உயிலின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, ஆவணத்தை தாக்கல் செய்து நான் தான் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் இருந்து திரும்ப பெற்று வந்தேன்.  வா.சா.ஆ.33 ல் அந்த வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட வருவாய் துறை ஆவணங்களை எதுவும் இணைக்கவில்லை என்றால் ஆமாம்.

பி.வா.சா.ஆ.8  சமரச மனுவிலும் மேற்படி வழக்கு சம்மந்தப்பட்ட வருவாய் துறை ஆவணங்களை இணைக்கவில்லை என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.7 தான் பிரச்சனைக்குரிய உயில் அந்த ஆவணத்தை சார்பு நீதிமன்றத்தில் ஆவணமாக குறியீடு செய்யவில்லை என்றால் ஆமாம்.  பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் அந்த ஆவணத்தை

எழுதியவர் தனக்கு வழக்கு சொத்து எந்த வகையில் பாத்தியம் என்று எழுதவில்லை என்றால் ஆமாம். ஆவணத்தை எழுதியவர் தனக்கு சொத்து பிதுராஜித வகையில் பாத்தியப்பட்டது என்று எழுதி உள்ளார் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.7 உயில் ஆவணத்தின் அடிப்படையில் தான் நாங்கள் இந்த வழக்கை நடத்துகிறோம் என்றால் ஆமாம். வழக்கு சொத்தின் அனுபவமும் என்னிடம் தான் உள்ளது.

கருமத்தம்பட்டி கிராமம் புல எண்.614/1 E, 1986 லேயே உட்பிரிவாகிவிட்டது என்று, துணை வட்டாட்சியர் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் ஆமாம். பட்டாவில் தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் புல எண்.614/1E காலை குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். பொதுவில் ஒரு பகுதியை தான் எங்களுக்கு கொடுத்துள்ளனர். பி.வா.சா.ஆ.7 ஆவணம் நோட்டரி வழக்கறிஞர் அவரது பதிவேட்டில் பதிவு செய்ததற்கான ஆவண எண்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். மேற்படி உயில் ஆவணத்தை யார் தட்டச்சு செய்தார்கள் என்ற விவரம் இல்லை என்றால் ஆமாம், மேற்படி ஆவணம் எழுதப்படும் போது எனக்கு 9 வயது அதனால் எனக்கு அது பற்றி சரியாக தெரியாது. மேற்படி பி.வா.சா.ஆ.7 யை நோட்டரி வழக்கறிஞர் பதிவுக்கு எடுத்தாரா அல்லது உண்மை நகல் சீல் மட்டும் வைத்தாரா என்று குறிப்புகள் இல்லை என்றால் எனக்கு தெரியவில்லை.

1997 ம் வருடம் கருமத்தம்பட்டி பல்லடம் தாலூக்காவிற்கு சேர்ந்தது என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.7 ல் உள்ள வழக்கறிஞர் முகவரி கோயம்புத்தூர் என்றால் ஆமாம். மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் பதிவு செய்த வழக்கறிஞரின் நோட்டரி பதிவு எண் இல்லை என்றால் ஆமாம். 379/2016 வழக்கில் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள சாட்சியை விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.7 ஆவணம் நிரூபிக்க எந்த நீதிமன்றத்திலும் நடவடிக்கை நிரூபிக்கப்பட்ட ஆவணமாக விளம்புகை செய்யப்படவில்லை என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள பெயரில் ஒரு நோட்டரி வழக்கறிஞர் அந்த சமயத்தில் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் அவரது நோட்டரி பதிவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணம் உண்மையாக எழுதப்பட்டிருந்தால் அதில் தட்டச்சு செயத்வர் பெயர் மற்றும் முகவரி குறிப்பிட்டிருக்கும் என்றும், அது நாங்களாகவே தயார் செய்யப்பட்ட ஆவணம் என்பதால் தான் அதில் எந்த குறிப்புகளும் இல்லை என்றால்

சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணம் உருவாக்கப்பட்டது என்பதால் தான் இதுவரை எந்த நீதிமன்றம் மூலமும் அதை நிரூபணம் செய்ய நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள சொத்து விவரத்தை எதன் அடிப்படையில் பி.வா.சா.ஆ.8 சமரச மனுவில் நான்கு எல்லையுடன் எழுதினோம் என்றால் எங்களுடைய அனுபவத்தின் அடிப்படையில் எழுதினோம். ஒரு சொத்தை விவசாயம் செய்தால் அந்த நபருக்கு அடங்கல், வரி ரசீது, பட்டா, சிட்டா, கொடுக்கப்படும் என்றால் ஆமாம். மேற்படி பி.வா.சா.ஆ.7 உயில் ஆவணம் எழுதியதாக சொல்லும் என் தாத்தா பெயரில் பட்டா, சிட்டா இருந்தது, அந்த ஆவணத்தை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.7 உயில் மேற்படி 379/2016 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நாங்களாக உற்பத்தி செய்து கொண்டது என்றால் சரியல்ல. 1071/2017 வழக்கில் இந்த உயில் ஆவணம் எழுதியதாக சொல்லும் வாரிசுகள் தரப்பினராக உள்ளனர் என்றால் இல்லை. மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணம் எப்போது எனக்கு என் கைவசம் வந்தது என்று பழைய வழக்கிலும், இந்த வழக்கிலும் சொல்லவில்லை என்றால் ஆமாம். மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணம் யார் வசம் இருந்தது, எப்போது வெளியே தெரியவந்தது என்பது பற்றியும் எனது வழக்கிலும், எனது பழைய வழக்கிலும், எனது எதிர் வழக்குரையிலும் சொல்லவில்லை.

நோட்டரி வழக்கறிஞர் எந்த வகையில் உயில் எழுதிக்கொடுத்த நபரை தனக்கு தெரியும் என்று சான்றிதழ் இணைக்கவில்லை என்றால் அப்படி எதுவும் இல்லை. மாரப்ப கவுண்டர் என் முன்பாக ஆஜராகி கையொப்பம் செய்தார் என்ற குறிப்புகள் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி உயிலில் ராக்கியப்ப கவுண்டர், பழனியம்மாள், ரங்கசாமி, கந்தசாமி, லட்சுமி, ஆறுச்சாமி ஆகியோர்கள் பற்றி இதில் குறிப்புகள் உள்ளது என்றால் ஆமாம். மேற்படி நபர்கள் 2016 ம் ஆண்டில் அனைவரும் உயிருடன் இருந்தார்கள் என்றால் ஆமாம். இவர்கள் அனைவரும் 379/2016 வழக்கில் தரப்பினர்கள் இல்லை. மேற்படி நபர்கள் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தை ஆட்சேபணை செய்யவில்லை என்றும், அவர்கள் எழுத்துபூர்வமாகவோ, வாக்குமூலமாகவோ சாட்சியம் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். மேற்படி நபர்களுக்கு பி.வா.சா.ஆ.7 உயில் ஆவணம் உள்ள விவரம் பற்றி தெரியாது என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.7 உயில் ஆவணத்தில் உள்ள மேற்படி நபர்களை அசல் வழக்கு எண்.379/2016 ன் சேர்த்து வழக்கு நடத்தி தீர்ப்பு பெறாததால் மேற்படி இந்த 379/2016 ன் தீர்ப்பு வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ளது என் தாத்தாவின் கையொப்பம் என்று நிரூபணம் செய்ய என்னிடம் வேறு பதிவு செய்த ஆவணம் இல்லை.

பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் இருபக்கத்திலும் உள்ள கையொப்பத்தில் ஒவ்வொரு எழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் இல்லை. எனவே, இது மாரப்ப கவுண்டரின் கையொப்பம் இல்லை என்றும், அது நாங்கள் உற்பத்தி செய்ததால் தான் கையொப்பம் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. மாரப்ப கவுண்டர் படிப்பறிவு இல்லாதவர் என்றால் ஆமாம், ஆனால் கையொப்பம் செய்வார். அவர் தமிழ் படிக்கவும் செய்வார். பி.வா.சா.ஆ.7 ஆவணம் மாரப்ப கவுண்டரால் எழுதப்படவில்லை என்றும், இது அவரது இறப்பிற்கு பின்னிட்டு நாங்கள் உற்பத்தி செய்த ஆவணம் என்றும், அதில் உள்ள சாட்சிகள் என்னுடைய உறவினர்கள் என்பதால் எனக்கு ஆதரவாக ஆவணத்தில் கையெழுத்து செய்துள்ளனர் என்றால் சரியல்ல. எனவே தான் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தின் மூலம் முறையாக தீர்ப்பு பெறாமல் மோசடியாக தீர்ப்பு பெற்று கூட்டு சதி செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

சாட்சி கையெழுத்திற்கு முன்பாக இரண்டு பெருக்கல் குறி உள்ளது என்றால் ஒரு பெருக்கல் குறி தான் உள்ளது. உண்மையாகவே எழுதப்பட்டு இருந்தால் அதில் பெருக்கல் குறி இட வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ல் சாட்சிகளின் வீட்டு கதவு எண், மற்றும் வீதி பெயர் இல்லை என்றால் ஆமாம். மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணத்தை எழுதியதாக சொல்லும் நபருக்கு பாத்தியம் இல்லாத சொத்து என்றால் சரியல்ல. அதனால் தான் அவருக்கு எந்த ஆவணத்தின் கீழ் பாத்தியம் என்று குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரியல்ல. ஆவண எண்.3810/1914 ஆவணத்தில் உள்ள சொத்திற்கும் இந்த பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணம் வாதிகளின் சொத்தை ஏமாற்ற நாங்கள் உற்பத்தி செய்தது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தின் வாக்கியங்களில் இருந்தே அது மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று தெரியவருகிறது என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.7 வாதிகளை

கட்டுப்படுத்தாது, நடைமுறைப்படுத்தாத ஆவணம் என்றால் சரியல்ல.

மேலும் குறுக்குவிசாரணைக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/சக்திகுமார் (எ) விஜயராகவன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur